06.03.2025

CC No. 1489/2022

அ.சா.1. திருமதி அறிவுசெல்வி. க-பெ. குமார்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை:**

எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது அப்பா கல்லல் காவல்நிலையத்திலும் உயர் அதிகாரிகளிடத்திலும் கொடுத்திருந்த புகார் மனுக்களை கல்லல் காவல்நிலையத்திற்கு நான் நேரடியாக ஆஜர் ஆகி எனது தகப்பனாருக்கு மனநிலை சரியில்லை என்று எழுதி கொடுத்தது போல் போலியாக ஆவணம் தயார் செய்து மோசடியாக எனது கையொப்பம் செய்து எனது தகப்பனார் கொடுத்த புகார் மனுக்களை காவல்நிலையத்தில் முடித்து வைத்துள்ளனர். அதற்காக நடவடிக்கை எடுக்க இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி மோசடி ஆவணத்தை யார் எழுதியது என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த ஆவணத்தில் கல்லல் காவல் ஆய்வாளர் என முத்திரை இடப்பட்டு கையெழுத்தும் போடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் மசாஆ. 3 ஆவணம் தான் காவல்நிலையத்தில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணமா என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் சாதுரமேஷ் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் கல்லல் ஆய்வாளர் என்றுள்ளது. அதில் உள்ள கையொப்பத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஆய்வு செய்தால் உண்மை தெரியவரும். அந்த ஆவணத்தை பார்த்து சாது ரமேஷ் என்பவர் தான் மசாஆ. 3 ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்தார் என்று முடிவுக்கு வந்தேன் என்றால் கல்லல் காவல்நிலைத்தில் 2016 முதல் 2019 வரை மேற்படி சாதுரமேஷ் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வந்தார்.

நான் ஒரு வழக்கறிஞர். கல்லல் காவல்நிலையத்தில் எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் பலமுறை சென்றிருக்கிறேன். அனைத்து காவல்நிலையங்களிலும் காவல் ஆய்வாளர்களின் பெயர்கள் கொண்ட பலகை இருக்கும் என்றால் சரிதான். அந்த பலகையில் காவல் ஆய்வாளர்கள் பணியில் சேர்ந்தது முதல் பணியில் இருந்த காலம் வரை தேதி குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த பலகை அனைவரது

பார்வைக்கும் வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு காவல்நிலையத்திற்கு செல்லும்போது ஆய்வாளர் சாதுரமேஷ் எந்த தேதி முதல் எந்த தேதி வரை பணியாற்றியுள்ளார் என்று நான் கவனித்தேனா என்றால் இல்லை. தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் சாதுரமேஷ் எந்த தேதி முதல் எப்போது வரை பணியில் இருந்தார் என்று தகவல் அறியும் சட்டத்தில் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

இவ்வழக்கு சம்பந்தமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் ஆவணம் பெற்றேனா என்றால் ஆமாம் மசாஆ. 3 ஆவணத்தை வாங்கினேன். மேற்படி ஆவணத்தை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்றபோது மேற்படி மசாஆ. 3 ஆவணத்தை யார் எழுதியது என்று கேட்டிருந்தேனா என்றால் இல்லை. மசாஆ. 3 ஆவணத்தை பார்த்த பின்பு தான் காவல் ஆய்வாளர் தான் எழுதியது என்று தெரிந்துகொண்டேன். காவல் ஆய்வாளர் முத்திரையை வைத்து சாதுரமேஷ் ஆய்வாளர் தான் மசாஆ. 3 ஆவணத்தை தயார் செய்தார் என்று என்னால் ஆணித்தரமாக சொல்லமுடியுமா என்றால் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அக்கால கட்டத்தில் கல்லல் காவல் ஆய்வாளராக சாதுரமேஷ் என்பவர் தான் பணியில் இருந்தார். அவர் என்னையும் பலமுறை எழுதிகொடுக்கும்படி மிரட்டியிருக்கிறார். என்னிடம் காட்டப்படும் மசாஆ.8 புகாரில் என்னை பலமுறை எழுதி கொடுக்கசொல்லி காவல் ஆய்வாளர் சாது ரமேஷ் மிரட்டியதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. மிரட்டியதாக மட்டும் சொல்லியிருக்கிறேன். மிரட்டுவதற்கும், எழுதிகொடுக்க சொல்லி மிரட்டுவதற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றிற்கு காவல் ஆய்வாளர் சாது ரமேஷ் வாக்குமூலம் எழுதிகொடுக்க சொல்லி மிரட்டியதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுவாக மிரட்டினார் என்று சொல்லியுள்ளேன்.

எனது தகப்பனார் காவல் ஆய்வாளர் சாதுரமேஷ் மீது கொடுத்த புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். 8.2.2018 அன்று கல்லல் காவல்நிலையத்திற்கு கட்சிகாரர்களுடன் சேர்ந்து சென்றேன். அந்த கட்சிகாரர்கள் பெயரை இந்த புகார் மனுவில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. 8.02.2018ல் என்னை காவல் ஆய்வாளர் மிரட்டியதாக சொல்லும் தேதியில் யார் என்னுடன் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறப்பு குறித்த வழக்கு

mistake of fact என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் காவல் ஆய்வாளர் சாது ரமேஷ் புலன் விசாரணை செய்து எனது தகப்பனாரை விஷ வண்டுகள் கடித்து இறந்துவிட்டதாக குவிமுச பிரிவு 174ன் கீழ் அவ்வழக்கை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அதை எதிர்த்து நான் குற்ற பல்வகை மனு எண்
688-2021 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எனது தகப்பனாரின் உடலை உடல் கூறாய்வு செய்யப்பட்டது. மேற்படி உடல் கூறாய்வு அறிக்கையில் அடிப்படையில் தான் எனது தகப்பனாரில் இறப்பு குறித்த வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிக்கையில் எந்த விபரமும் தெளிவாக சொல்லப்படவில்லை. எனது தகப்பனாரின் உடல் மீண்டும் உடல் கூராய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உடல் கூராய்வு அறிக்கையில் மூச்சு திணரல் ஏற்பட்டு இறந்ததாகவும் எத்தில் ஆல்கஹால் உடலில் இருந்ததாகவும் சொல்லப்பட்டிருந்தது. எனது தகப்பனார் டிடோட்டல் அவருக்கு குடிக்கும் பழக்கம் இல்லை. எனது தகப்பனாரின் உடல் கல்லல் ஆற்று படுகையில் உள்ஆடை கழற்றப்பட்டு கிடந்தது. அவருக்கு மூச்சு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. நல்ல திடகாத்திரமான உடல் கொண்டவர். மேற்படி தகப்பனாரின் வழக்கில் காவல் ஆய்வாளர் சாது ரமேஷ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக எந்த ஆவணமும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்வதற்கு தயாராக இருக்கிறேன். நான் தாக்கல் செய்திருக்கும் மனுவில் என்னை தவிர வேறு சாட்சிகள் இருப்பதாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் குவிமுச பிரிவு 156(3)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன். அது தேவையில்லாத காரணத்தினால் சாட்சி பட்டியல் கொடுக்கவில்லை. தற்போது சாட்சிகளை விசாரணை செய்வதற்கு தயாராக இருக்கிறேன். சாட்சி பட்டியலையும் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

எதிரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வாங்கிய ஆவணத்தில் ஆய்வாளர் சாது ரமேஷ் 25.06.2018 முதல் 22.8.2019 வரை சிவகங்கை மாவட்ட குற்ற பிரிவு காவல்நிலையத்தில் பணிபுரிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 08.02.2018ல் என்னை மிரட்டினார். இது அதற்கு பிறகு உள்ள தேதியாகும். மேற்படி ஆவணம் எசாஆ.1. 8.02.2018ம் தேதி ஆய்வாளர் என்னை மிரட்டியதாக அவர் மீது புகார் அளித்தேனா என்றால் இல்லை. பொதுவாக நானும் எனது தகப்பனாரும் எந்த விசயமாக இருந்தாலும் புகார் கொடுப்பதை வழக்கமாக வைத்திருப்போம் என்றால் சரிதான். தவறாக இருந்தால் புகார் அளிப்போம். 8.02.2018ம் தேதி நான் சொல்வதுபோல்

எதிரி சாது ரமேஷ் எந்த தவறும் செய்யாத காரணத்தினால் தான் அவர் மீது நான் எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் எனது சீனியரிடம் காவல் ஆய்வாளர் மிரட்டியதாக கூறினேன். இதே இடத்தில் நான் வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதால் அவர் மீது புகார் வேண்டாம் என்று சொல்லிவிட்டனர். அதனால் புகார் அளிக்கவில்லை. மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள புகார் மனுவிலோ வேறு ஆவணங்களிலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் தாக்கல் செய்ததாக கூறும் புகார் குறித்த விபரங்கள் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தாக்கல் செய்ததாக சொல்லும் புகார் என்னிடம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கொடுத்த புகார் குறித்த விபரங்கள் எதுவும் தெரியாமல் இல்லாத புகாரை இருப்பதாக கூறி எதிரியை மிரட்டுவதற்காக அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 01.03.2019 சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கிடைத்த பதிலில் நான் எனது தகப்பனாருக்கு மனநலம் சரியில்லை என்று கூறி எனது தகப்பனார் கொடுத்த அனைத்து புகார்களையும் முடிக்க சொல்லி எழுதிகொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் எனது தகப்பனாரின் அனைத்து புகார்களும் முடிக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தது. அப்போது தான் எனது தகப்பனார் புகார் கொடுத்த விபரம் தெரியவந்தது. 12.07.2018ம் தேதி எனது தகப்பனார் தாக்கல் செய்த மனு முடிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற பதிலில் எந்த ஆய்வாளர் எனது தகப்பனாரின் புகார் மனுக்களை முடித்து வைத்துள்ளார் என்று கண்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி 25.06.2024ம் தேதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணத்தின் படி எனது தகப்பனார் மனுவை முடித்து வைத்ததாக சொல்லப்படும் வாக்குமூலம் 12.07.2018 முதல் 13.08.2018 வரை நடந்துள்ளதா அந்த சமயத்தில் ஆய்வாளர் சாது ரமேஷ் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் பணியாற்றியதால் மேற்படி ஆவணத்திற்கும் எதிரி சாது ரமேஷ்க்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அசாஆ. 3 ஆவணத்தில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அது சம்பந்தமான ஆவணத்தை எதிரி தனது சாட்சியத்தின்போது தாக்கல் செய்ய தயாராக இருக்கிறார். எந்த வேறு சாட்சியோ, ஆவண சாட்சியோ இல்லை அருகில் நின்றவர்கள் சாட்சியோ இல்லாமல் வேறு ஒரு காவல்நிலையத்தில்

பணியாற்றிய ஆய்வாளர் சாது ரமேஷ் மீது பொய் வழக்கு தாக்கல் செய்து அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அவருக்கு ஏற்பட்ட அனைத்து மனஉளைச்சலுக்கும் எல்லா பொறுப்பும் உங்களையே சாரும் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு புகார் கொடுப்பதை விட்டுவிட்டு குறிப்பாக ஒரு நபரை பழிவாங்கும் நோக்கத்தில் புகார் அளிப்பது சட்ட விரோதமாகும் என்றால் சரியல்ல. மசாஆ.3 ஆவணம் உண்மையில் யார் எழுதினார் என்பதை நானே நிரூபிக்க கடைமைப்பட்டிருக்கிறேன் என்றாலும், மேற்படி ஆவணத்திற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

Sd/- Selvi.C.JAYAPRADHA, B.Sc., B.L. (Hons.)

**Judicial Magistrate (FAC), Karaikudi**